Registered as a News-
paper in Ceylon
P. M. G. NO. H. A
89/300 of 1939.

சிவமயம்

# இந்துசாதனம்

விரோதி வருஷம்
(1889)
ஆவணிமாதம்
28-ந்உ ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

புத். ௫௯] யாழ்ப்பாணம் — சர்வசித்து ஆடி மீ ௨௦ ௨ (1947 ஆகஸ்ட் 5 செவ்வாய்க்கிழமை) [இல ௩௫

## பிரார்த்தனை

குறைவிலா நிறைவே கோதிலா அமுதே
    யீறிலாக் கொழுஞ்சுடர்க் குன்றே
மறையுமாய் மறையின் பொருளுமாய் வந்தென்
    மனத்திடை மன்னிய மன்னே
சிறைபெறு நீர்போற் சிந்தைவாய்ப் பாயுந்
    திருப்பெருந் துறையுறை சிவனே
இறைவனே நீயென் னுடலிடங் கொண்டாய்
    இனியுன்னை யென்னிரக் கேனே.

—மணிவாசகர்.

## இந்திய அரசாங்கம்

### புதிய மந்திரிகள் யார் யார்?

"நேஷனல் ஸ்ராண்டாறு" பத்திரிகையின் கூற்றுப்படி, ஆச்சிரிய கிருபாலினி, மேற்கு வங்காளத் தேசாதிபதியாக வர மறுத்துவிட்டார். அந்த இடத்துக்கு ஸ்ரீஜுத் இராஜகோபாலாச்சாரியர் செல்வாராம்.

இந்திய மத்திய அரசாங்கத்தின் மந்திரிகளாகப் பின்வருவோர் நியமிக்கப்படுவர் என்றுதான் நிச்சயமாக சம்புவதாக ஷை பத்திரிகை தெரிவிக்கிறது.

பண்டிதநேரு: பிரதமர்; வெளிநாட்டு விவகாரம்.

சர்தார் படேல்: உள்நாடு, சமஸ்தானங்கள்.

மௌலானா ஆஸாத்: கல்வி

டக்ரர் இராஜேந்திரப பிரசாத்: உணவு, விவசாயம்.

டக்ரர் ஷியாம் பிரசாத் முக்கர்ஜி: இராணுவம, பாதுகாப்பு.

சேர். R. K. ஷண்முகம் செட்டி: நீதி.

டக்ரர் பீ. ஆர். அம்பேத்கார்: சட்டம்.

ஸ்ரீஜக ஜீவன்ராம்: தொழில்.

ராஜ குமாரிஅமிர்தகௌரி: சுகாதாரம்.

டக்ரர் ஜோன் மத்தாய்: புகைதப் பகுதி.

ஜனுப் ருவி அகமத் சித்வாய்: கைத்தொழில், சுரங்கம்.

ஸ்ரீ எஸ். வி. கட்கில்: வர்த்தகம்,

ஸ்ரீ R. K. ஸித்வா: கைத்தொழில், விவசாயம்.

சர்தார் சாந்த சிங்: போக்குவரவுப் பகுதி.

இப்போது இடைக்கால மந்திரியாயுள்ள ஸ்ரீஜுத். எச். பாபா சென்னைத் தேசாதிபதியாக நியமிக்கப்படுவர்.

## ஜின்னுவின் வேண்டுகோள்

### முஸ்லீம்களுக்குப் புத்திமதி

இந்தியச் சமஷ்டியில் உள்ள முஸ்லீம்கள் அனைவரும் இந்திய அரசாகத்துடன் பூரணமாக ஒத்துழைக்க வேண்டு மென்று முஸ்லீம்களுக்கு ஜனுப் ஜின்னு ஓர் ஆஞ்ஞை விடுத்திருக்கிறார்.

தான்பாகிஸ்தான் 'கவர்னர் ஜெனலாக வரச் சம்மதித்த போதிலும், தானும் இந்திடச் சமஷ்டியின் பிரஜை யென்றும், முஸ்லீம்களுக்குச் சேவை செய்யும் ஓர் எண்ணத்தினுலேயே பாகிஸ்தான் 'கவர்னர் ஜெனறல்' பதவியை ஏற்கச் சம்மதித்த தென்றும் ஜின்னு கூறுகிறார்.

# சம்பந்தர் தொண்டு

## சைவத்தை வளர்த்த தனிப்பெருஞ்சீலர்

நாயன்மார் நால்வர்களுக்கும் ஒவ்வொரு ஸ்தலம் அவரவர்களுடையவாழ்க்கையோடு மிகவும் நெருங்கிச் சம்பந்தப்பட்டுள்ளது. திருநாவுக்கரசருக்குத் திருவையாறும், சுந்தரருக்குச் திருவாரூரும், மாணிக்கவாசகருக்குத் திருப்பெருந்துறையும் போல ஞானசம்பந்தருக்கு திருவாலவாய் என்ற மதுரைப்பதி ஏற்பட்டுள்ளது. இந்த ஸ்தல விஷயமாக இவர் பத்துப் பதிகங்கள் பாடியுள்ளார்.

அக்காலத்தில் பாண்டிய நாட்டிற் சமணமதம் தளழத்திருந்தது அந்நாட்டு அரசனும் அந்த மதத்தைத் தழுவியிருந்தான். ஆனுல் அவன் மனைவியாகிய மங்கையர்க்கரசியும்மந்திரியாகிய குலச்சிறையும் சைவசமயத்தினராகவே இருந்து, சைவ விளக்கு அணைந்துபோகாமல் காத்துவந்தார்கள்; ஞானசம்பந்தர் சோழநாட்டில் பற்பல அற்புதங்களைச் செய்து, சைவத்தைத் தழைக்கச் செய்வதைக் கேட்ட இவ்விருவரும், அவரைப் பாண்டிய நாட்டுக்கு அழைத்து வருவதற்காகச் சில பரிஜனங்களை அனுப்பினுர்கள். அப்போதுதிருமறைக்காடு என்னும் ஸ்தலத்தில் ஞானசம்பந்தர், திருநாவுக்கரசருடன் எழுந்தருளியிருந்தனர். மதுரைவிஷயங்களைக்கேட்டுத் தெரிந்துகொண்ட சம்பந்தர் உடனே அங்கு புறப்படத் துணிந்தனர்; அப்போது உடனிருந்த திருநாவுக்கரசர், "சமணர்கள் பொல்லாதவர்கள்: வஞ்சனைகள் பல செய்வார்கள்; கோள் நிலையும் நன்ருக இல்லை" என்று சொல்லி சம்பந்தரைத் தடுத்தனர். ஆனுல் ஞானசம்பந்தர் தமது பிரயாணத்தை நிறுத்தவில்லை. "சிவபெருமான் என்னுள்ளத்தில் புகுந்துள்ளான் ஆதலால் ஒன்பது கோள்களும் நல்லனவேயாகும்" என்று அவர் அப்பருக்குப் பதில் சொல்லிவிட்டு மதுரைக்குச் சென்ருர். துகாராம் என்ற மகாராஷ்டிரப் பக்த சிரோமணி "இறைவனைக் காண்பதே நல்ல சகுனம்; அவனை நினைத்துக் கொண்டிருந்தால் எல்லா நன்மையும் உண்டாகும்; இறைவன் நாமத்தைத் தியானித்துக்கொண்டிருந்தால் வார்த்தைகள் எல்லாம் நன்மையாகவே வரும்; எல்லாத் திசைகளிலும் நற்சகுனங்கள் நிரம்பும்" என்றுசொன்னதை இங்கு ஒப்பிடலாம். இவரைப்போல, கர்ணுடக பக்தராகிய புரந்தரதாசரும், 'ஹரிநாம சங்கீர்த்தனம் நல்ல முகூர்த்தத்தின் பயனைக் கொடுக்கும் அதுவே நல்ல நக்ஷத்திரமுமாகும்' என்கிருர்.

மதுரையில் ஞானசம்பந்தர் எழுந்தருளியிருந்த மடத்துக்குச் சமணர்கள தீயிட்டனர். தொண்டை நாட்டில் திருநாவுக்கரசர் சமண சமயத்தைக் கைவிட்டு, சைவத்தைக் கைப்பற்றியதனுல், தங்கள் சமயத்துக்கு சேர்ந்த தீங்கு பாண்டிய நாட்டிலும் நேரக்கூடாதென்று சமணர்கள் எண்ணியே இப்படிச் செய்தனர். அப்போது ஞானசம்பந்தர் பாடிய பதிகத்தின் ... மடத்தைப்பற்றிய தீ அவிந்து, பாண்டியவரசனை ஆட்கொள்வதற்காக, அவனைச் சுரநோயாகப் பீடித்தது அந்நோய் சமணர்களுடைய மந்திரங்களாலும் தந்திரங்களாலும் தீரவில்லை. அதன்பிறகே சம்பந்தர் அரசனைக் குணப்படுத்துவதற்காக, அரண்மனைக்கு அழைக்கப்பெற்ருர். அப்போது இவர் பாண்டியனுடைய மனைவியையும் மந்திரியையும் நோக்கி, 'ஒன்றுக்கும் நீர் அஞ்சவேண்டா; உணர்விலாசமணர்தம்மை வாதில் வென்று அரசனைச் சைவனுக்குவேன்" என்று அருளினுர். அதன் பின்னா இவர் இறைவனுடைய திருவுள்ளக் குறிப்பை அறியவேண்டிக் கோவிலுக்குச் சென்ருர். ஆண்டவனுடைய திருவுள்ளக் குறிப்பு அநுகூலமாகவே இருந்தது. இவ்விஷயம் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர், தாம் செய்யப்புகும் ஒவ்வொரு காரியத்துக்கும் தேவியின் அருளையும் அநுமதியையும் வேண்டி, அவற்றைப் பெற்றபிறகே அவ்வக் காரியங்களை தேவியின் கருவியாகவே, செய்வர் என்பதை ஒத்திருக்கின்றது. பகவத் ராமாநுசாரியரும் தாம் செய்யத்தொடங்கும் காரியங்களுக் கெல்லாம் இறைவனுடைய அருளையும் அநுமதியையும் வேண்டுவர். இதுவே யாவரும் செய்யவேண்டிய முறையும் கடமையும்.

ஞானசம்பந்தர் பாண்டியனைபடைந்தபோது இவருடைய இளம்பிராயத்தைக் கண்ட மங்கையர்க்கரசியார்க்கு இவருடைடவல்லமையில்சிறிது சந்தேகமும் பயமும் உண்டாயின. வாலியைக் கொல்வதாக வாக்களித்த ஸ்ரீ ராமபிரானிடம் சுக்கிரீவனுக் சந்தேகம் உண்டாகவில்லையா? இதைத் தெரிந்துகொண்டசம்பந்தர், காசியை நோக்கி, "பானல் வாயொரு பாலன் ஈங்கிவன் என்று பரிவெய்தவேண்டாம்; திருவாலவாய்அரன் என்முன்னர் நிற்கின்றனன், நான் இந்த ஈனர்களுக்கு எளியேன் அல்லேன்" என்று தைரியம் சொன்னுர். இறைவனிடம் இவர் கொண்டிருந்த விசுவாசத்தை அப்போது பாடிய பதிகம் நன்கு தெரிவிக்கின்றது, ஸ்ரீ ஆளவந்தார் சோழ அரசனுடைய அரண்மனை வித்வானுடன் வாதம் செய்ய வந்தபோது அவருடைய இளந் திருமேனியைக் கண்டு சோழவரசனுடைய மனைவி பரிவெய்திய வரலாறு இங்கு ஞாபகத்துக்கு வருகிறது.

அப்பால் ஞானசம்பந்தர் "மந்திரமாவது நீறு" என்று தொடங்கும் பதிகத்தைப் பாடி, திருநீறு கொண்டு தடவிப் பாண்டியனுடைய நோயை நீக்கினர். இதனுல் அரசனுக்கு சமண சமயத்தில் சிறிது பற்றுநெகிழ்ந்தது. என்ருலும், ஞானசம்பந்தர் சமணர்களோடு வாதம் செய்யவேண்டியிருந்தது. அவர்களுடைய ஏடுகளையும் சம்பந்தருடைய பாசுரம் எழுதிய ஏடுகளையும் நெருப்பில் இட்டனர். இந்தச் சோதனையில் சம்பந்தருடைய ஏடுகள் எரியாதிருந்தன. பின்னர், இவ்விருவகை ஏடுகளும் வைகை

தொடர்ச்சி 6ம்பக்கம்

# தேர்தற்றினங்கள்

## ஓர்மாதகால அமளி

சென்ற வியாழக்கிழமை வெளியான கஸற் பத்திரிகையில், பாராளுமன்றத் தேர்தல்களுக்கான தினங்கள் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன. அதன்படி தேர்தல் ஆகஸ்டுமாதம் 23-ம் திகதி ஆரம்பமாகி செப்டெம்பர்மாதம் 20-ம் திகதி முடியும்

ஆகஸ்டுமாதம் 23-ந்திகதி யாரம்பமாகும் தேர்தலில், மிஸ்ரர் சேனநாயக்கா, மிஸ்ரர் ஜோர்ஜ் ஈ. டீ. சில்வா மிஸ்ரர் ருஜா ஹீவவித்தாரணை என்னும் மூன்று மந்திரிகளும் தத்தம் தொகுதிகளிற் போட்டியிடுவர். அரசாங்கசபைத் தலைவராயிருந்த சேர் வைத்தியலிங்கம் துரைசுவாமியின் தொகுதியான ஊர்காவற்றுறையிலும் அதேதினம் தேர்தல் நிகழும்:

தேர்தல தினங்களும், அத்தினங்களில் போட்டி நிகழும் தொகுதிகளும் பின்வருமாறு:

ஆகஸ்டு 23: மீரிகம, கொற்றே, அகலவத்த, கண்டி, நுவரெலியா, மாத்தறை, ஊர்காவற்றுறை திருக்கோணமலை, பில்கிரிய, பண்டாரவளை, கிரியலை.

ஆகஸ்டு 25: வத்தகமா, வெலிகம, டெகியோவத்தை,

ஆகஸ்டு 26: அற்றனுகலை, அவிசாவலை, ஹொரணை, சாவகச்சேரி வாரியப்பளை.

ஆகஸ்டு 27: டெனிபாய், மூதூர்.

ஆகஸ்டு 28: பருத்தித்துறை டமபதோனிய, நிவித்திகலை.

ஆகஸ்டு 30: களுத்துறை, அம்பலாங்கொடை, பலப்பிற்றிய.

செப்டெம்பர் 1: மட்டக்களப்பு. கோப்பாய்.

செப்டெம்பர் 4: பொத்துவில், யாழ்ப்பாணம்.

செப் 6: கொற்றகலை, காலி, டொடன்காஸ்வந்த, ஹொரோவப்பொத்தனை, பொலன்னருவை, பதுளை, இரத்தினபுரி.

தொடர்ச்சி ...ம் பக்கம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## நல்லூர்க் கந்தசுவாமி கோயில் மகோற்சவம் — 1947

நல்லூர்க் கந்தசுவாமி கோவில் வருடாந்த மகோற்சவங்காரணமாக 1947-ம் ஆண்டு ஆகஸ்ட் ௴ 21-ந் திகதி தொடக்கம் செப்டெம்பர் மாசம் 15-ந் திகதி முடிய, நிதமும் காலை 6 மணிதொடக்கம் இரவு 12 மணிவரையும் மேற்படி கோயில் வீதிகளாகிய யாழ்ப்பாணம் பருத்தித்துறைத் தெருப்பாகம் பழைய சந்தைத் தெருப்பாகம் என்னும் மார்க்கமாகப்போகும் எவ்வகை வண்டிகளும் அப்பாதைகளைத் தவிர்த்து உவைமன் தெரு, நாவாந்துறைத்தெரு, நல்லூர் முதலாங் குறுக்குத்தெரு என்னுமிவைகள்மூலமாகவே போக்குவரவு செய்யவேண்டுமென இதனாற் பிரசித்தஞ் செய்யப்படுகின்றது.

(ஒப்பம்) R. E. பிளாஸி
வடமாகாணப் பொலிஸ்தலைவர்
யாழ்ப்பாணம்
பொலிஸ்தானம்.
2-8-47. G 105 5, 8-8.47.

---

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

## இந்து சாதனம்.

யாழ்ப்பாணம், சர்வசித்து ஞூ
ஆடிமீ உ௦ உ செவ்வாய்க்கிழமை

### புகைரதத்திற் பகற்கொள்ளை

சிலகாலமாக இலங்கை அரசினர் புகைரதத்தானத்தில் நடக்கும் திருட்டுச் செயல்கள் அதிகப்படலாயின வென்பது பலரறிந்த விஷயம்; இற்றைக்கு இரண்டு வருடங்கட்கு முன் புகைரதக் காவலனொருவனைக் கொன்றுவிட்டு அவனுடைய பாதுகாப்பி லிருந்த தபாற் பைகளை யாரோ திருடினரென்ற செய்தி அக்காலத்தில் வெளிவந்தது; அதன் பின்னரும் புகைரதத்தி லேற்றப்பட்டுள்ள உணவுப் பொருள்களைத் திருடுதல், புகைரதத் தண்டவாளத்தைச் சிதைத்துப் பிரயாணிகட்கு உயிர்ச் சேதத்தையும் பொருட் சேதத்தையும் விளைத்தல் முதலான பயங்கரமான செயல்களும் நடைபெற்றன. புகைரதப்பகுதி யதிகாரிகளும் இத்திருட்டுத் தொழில்களையும் அக்கிரமங்களையுங்கண்டு பாதுகாப்புப் பொலிஸ் முதலானவர்களைப் புகைரதத் தொடர்களின் காவலாகப் போய்வரச் செய்துள்ளனர்; இதனாற் புகைரதத் தானத்திலே திருட்டுத்தொழில் நேருதல் ஒருவாறு குறைந்து விடுமென்று பிரயாணிகள் எண்ணியிருந்தார்கள்; ஆனாற் சென்ற வாரம் புகைரதத் தொடரில் நேர்ந்த துணிகரமான திருட்டினை எண்ணும்போது மனம் திகிலுறுகின்றது.

கனமுல்லாவிற்கும் கம்பகாவுக்கு மிடையே யுள்ள யாக்கொடா என்னும் புகைரதம் தங்கி நிற்குந் தானத்தில், பகற் காலத்திலேயே புகைரதம் தங்கி நிற்குஞ் சமயம் பார்த்து, ஒரு கூட்டம் திருடர்கள் சடுதியிற் புகைவண்டி யொன்றிற் பாய்ந் தேறி, காவலாக நின்ற பொலிஸின் கையிலிருந்த துப்பாக்கியைப் பறித்துப் பொலிசிற்கும் புடைத்துப் பணப் பெட்டியை வைத்துக்கொண் டிருந்தவர்களாகிய இரு கிளார்க்மாருக்கும் அடித்து, ஏதோ காரமான தூளை ஊதி அம்மூவர் பார்வையையும் அப்போதைக்குக் கெடுத்துவிட்டு, பணப்பெட்டியையும் தூக்கிக்கொண் டிறங்கி, அயலிலே முந்தியே கொண்டுவந்து நிறுத்தியிருந்த மோட்டார் ரதத்திலேறிக்கொண்டு மின்னல் போல் மறைந்து விட்டனராம்.

இந்தத் திருடரை இற்றை வரையில் தேடி அகப்படுத்திய தென்ற செய்தி இன்னமும் வெளிவரவில்லை; இப்படியான அக்கிரமங்கள் பல சென்றயுத்த காலத்திற்குப் பின் அதிகப்படலாயின; இந்தியாவி லுள்ள தீவர்த்திக் கொள்ளைக்காரர் இராக்காலத்திற் செய்யும் அக்கிரமத்தைக் காட்டிலும் இங்குள்ள இத்திருடர்கள் பகற் காலத்திற் செய்யுங் கொள்ளை பயங்கரமான தெனலாம்; தீவர்த்திக் கொள்ளைக்கார ரில்லாத நாடு இந்த இலங்கையாகுமென்று மகிழ்ந்திருந்த இலங்கைவாசிகள், இப்பொழுது புகைரதத்தில் நடக்கத் தலைப்பட்டிருக்கும் பகற்கொள்ளையை அறிந்து பெரிதும் அஞ்சுகின்றனர்; மோட்டரதம், பஸ் என்னுமிவைகள் மூலமாகப் பயணஞ் செய்தலைக்காட்டிலும் புகைரத மூலமாகப் பயணஞ் செய்தல் பெரும் பாதுகாப்பாகுமென்ற நம்பிக்கை இலங்கைமக்களிடத்தி லுண்டு; அந்த நம்பிக்கைக்குப் பங்கம் நேராமல் புகைரதப் பகுதி அதிகாரிகளும் பொலிஸ் பகுதி அதிகாரிகளும் இப்படியான துணிகரத்தோடும் உயிர்ச்சேதம் பொருட் சேதங்களோடுங்கூடிய திருட்டுத்தொழில் அரசினர் புகைரதத்தில் இனிமேல் நடக்க வொட்டாது தடுத்தற்காகிய உபாயங்களை இன்னே செய்வார்களாக.

---

## உறுதிமொழிகள்

குழந்தையின் தன்மையை இழக்காதவனே பெரியோனாவான்.

நீ பிறரை நேசித்தும், அவர்கள் நேசமில்லாது போவாராயின், உனது நேசத்தை ஆராய்ந்து பார்; நீ பிறரை அடக்கி ஆளும்போது அவர்கள் அடங்காமல் இருப்பாராயின், உனது ஞானத்தை ஆராய்ந்து பார்; நீ பிறரை மதித்தும், அவர்கள் உன்னை மதிக்காது போயின் நீ கொடுக்கும் மதிப்பை ஆராய்ந்து பார்: நீ செய்வது வீணாகுமாயின், அதன் காரணத்தை உனக்குள்ளே ஆராய்ந்து காண்க நமது வாழ்க்கை நேர்மையாயின், பகவானது உலகிற்குக் கீழுள்ளவை யாவும் நம்மை நோக்கித் திரும்பி நிற்கும்.

பாதை அருகே யுள்ளதாயிருந்தும், நாம் அதை வெகு தொலையில் நாடுகிறோம்; வேலை சுலபமாயிருப்பினும் சிரமத்தையே நாடுகிறோம்.

தண்ணீர் தீயைவெல்லுவதுபோல, அன்பு அன்பின்மையை வெல்லும்; இந்நாளைய மனிதனது அன்புச் செயல்கள் ஒரு வண்டி விறகுத் தீயை அணைக்க ஒரு கிண்ண நீரை எடுத்துச் செல்வது போலாகும். தீ அணையாதபோது, அவர்கள் "தண்ணீர் நெருப்பை வெல்வதில்லை" என்கிறார்கள். இதனால் அவர்களது அன்பின்மைக்குத் தூண்டுகோல் ஒன்று கிடைப்பதனால், அன்பு மேலும் மேலும் குறைந்து முடிவில் எள்ளளவும் அது இல்லாது தொலைகிறது.

---

# நாவலர் மார்க்கம்

## அதுவே நற்கதி யளிக்கும்

புதுவை அரவிந்தாஸ்ரமத்தில் தவமியற்றும் யோகி சுந்தானந்த பாரதியார், தமது இலங்கை யன்பர் ஒருவருக்கு 27-7-47 இல் எழுதிய கடிதத்திலிருந்து கீழே சொல்லப்படும் 3 முக்கிய விஷயங்களும் அநுவதிக்கப்படுகின்றன.

"அரசியல் இரத்தவெறி கொண்டு கத்திக்குத்தில் இறங்கிவிட்டது. இன்னும் வேட்டை வலுக்கும்போல் இருக்கிறது. மனிதன் மனிதத் தன்மையை இழந்துவிட்டான். அரசியல் கொந்தளிப்பில் ஆசைப் படகோட்டிக் கலைப் புயலில் மோதுண்டு மனிதவாழ்வு இலட்சியத்தை விட்டு எங்கோபோய் மனமுடைந்து விம்முகிறது. இந்தச் சமயம் சன்மார்க்க இயக்கத்தால் மக்கட் பண்பையும் மனிதனுள்ளிருக்கும் தெய்வப் பண்பையும் உணர்த்தவேண்டும்.... நாவலரின் புனித வாழ்வும் சிவநேசப் பண்பும் தமிழருக்கு மீண்டும் நல்வழி காட்டும் ஆதலால் இலங்கை அன்பர்களை ஊக்கி, நாவலர் வரலாறு குருபூசைக்குள் வெளிவரச்செய்க".

"நாவலர்நூல் விற்பனையி லிருந்து 'சுத்தசன்மார்க்கம்' என்ற அரிய நூலொன்றை வெளியிட்டு அடக்க விலைக்கே பொதுமக்களுக்குத் தர எண்ணம். அந்த நூலே மனித சமுதாயம் அனைத்தும் பின்பற்றத்தக்க பொதுமறை விளக்கமாகும். இதில் கிழக்கும் மேற்கும் தெற்கும் வடக்கும் கூடிக்குலாவும் நன்கொடையாளருக்கு நூல்கள் தந்ததுபோக மீதியின் விற்பனையே சன்மார்க்கநூலுக்குப் பொருளாதாரமாகும்".

"நாவலருக்குப் பிறகு இலங்கையை அணிசெய்த தமிழ்மணியான விபுலானந்த அடிகள் மறைந்தது பெருந் துயரளிக்கின்றது. விபுலானந்தர் கல்வியும் ஒழுக்கமும், அயரா உழைப்புங்கொண்ட பெரியார். அவர் செய்த யாழிசைநூல் தமிழ் உள்ளமட்டும் தமிழுக்கு இசையொழி தந்து நிலவும், விபுலானந்தரை இழந்து வருந்தும்யாழ்ப்பாணமக்களுக்குஎன் அனுதாபமாகுக! அவர் வரலாற்றையும் விரிவாக எழுதவேண்டும்."

---

# அன்பு நெறி

( ஸ்ரீ ராமகிருஷ்ணவிஜயம் )

மக்களாய்ப் பிறந்தவர்க்கு மூவகைக் கடமைகள் உள்ளன; அவையாவன: தமக்குரியகடமை, பிறர்க்குரியகடமை, ஈசனுக்குரிய கடமை என்னும் மூன்றும். ஒவ்வொருவனும் தனக்குச் செய்யவேண்டிய கடமையாவது, பிறவாமையைப் பெறுதலே; பிறர்க்குச் செய்யவேண்டிய கடமையாவது, தம்மைப்போன்று பிறரும் பிறவா நிலையை அடையும்படி செய்ய முயலுதலே; ஈசனுக்குச் செய்யவேண்டிய கடமையாவது, அவனை மகிழ்விக்கும் பணியில் ஈடுபடுதலே, இம் மூன்று கடமைகளையும் வெவ்வேறாகச் செய்யத் தொடங்குவார் பலர்; ஆயினும் ஒரே தொழிலில் ஈடுபடும்போது இம் மூவகைக் கடமைகளையும் நிறைவேற்றுதல் அறிவுடைமையாகும்; அத் தன்மை வாய்ந்த தொழிலை அறிந்து பின்பற்றுதலே அறிவுடைமையின் பயனாகும்.

முற்காலத்திலே பல தீர்பிறவிப் பயனை (பிறவா நிலையை அடைதல்) அடையும் பொருட்டு உலகவாழ்க்கையைத் துறந்து கானகம் சென்று, தவமும் தியானமும் பயின்றனர்; பலநாள் முயன்று தமக்குள்ளே திகழும் பரம்பொருளைக் கண்டு பேரின்பம் பெற்று முத்தியடைந்தனர். தன்னை வெல்பவன் தரணிமுழுவதையும் வெல்பவனாவான்: தன்னை உயர்த்தும் அளவிற்கு ஒருவன் உலகத்தையும் (தான் அறியாமலும், பிறர் உணராமலும்) திருத்துவது உண்மையே. எவ்வாறெனில், உபதேசத்தை விட அதிகமாக ஒருவனது ஒழுக்கமே பிறரை உயர்த்தும்; ஒழுக்கத்தின் வலிமையே உபதேசத்திற்கு வலிமையாகின்றது இன்னும் ஈசனைச் சதா நினைந்திருக்க முயலுதல் அவனை மகிழ்விக்கும் பணியாகின்றது. ஆக ஒரு வழியாகப் பார்க்கும்போது, காட்டிலே தனியிடத் தமர்ந்து யோகம் பழகியவரும், மூவகைக் கடமைகளையும் செய்தவராவார் இந்த நெறியே முற்கால இருடியர் பற்றிய ஞான நெறியாகும்.

பிற்காலத்திலே பெரியார் பலர் பிறவிக் கடலை நீந்தி முக்திக்கரை சேரும்பொருட்டு ஈசனது திருவடியையடைய முயன்றனர். 'தமர் உகந்தது எவ்வுருவம் அவ்வுருவம்' (அடியார்கள் தாம விரும்பும் வடிவம் எதுவோ அதை) உடையவன் ஈசன் ஆதலின் அழகும் தூய்மையும் மிக்க இடங்களிலே ஈசனுக்குக் கோயில்களையமைத்து அங்கே தாம் விரும்பும் வடிவங்களிலே அவனை எழுந்தருளப்பண்ணுவித்தனர். ஈசன் அன்பு வடிவமானவன். அன்பரிடத்தே பைத்தியங் கொண்டவன். அன்பையே உணவாகக் கொண்டு மகிழ்பவன். ஆதலின் அவனது திருக்கோயிலுக்குச் சென்று மெழுகிட்டும் அலகிட்டும் மலரிட்டும் இன்னும் பலவாறுகவும் அவனை வழிபட்டு வந்தனர். அன்போடு பக்கள் செய்யும் தொண்டுகளால் மகிழ்ந்து, ஈசன் அவர்களைக் கடைத்தேற்றுவான். தனி யிடங்களையும் காடு மலைகளையும் நாடாது, அடியார் தம்மைப் போன்று ஈடுபடும் அன்பர்களோடு கூடி வாழ்வர்; ஈசனை நினைக்கும்போதும், அவனது பெருமையைப் பேசும்போதும் அவனுக்குப் பணி செய்யும்போதும் பல அன்பர்கள் கூடியிருந்து மனங் குளிர்ந்து பொழுதுபோக்குவர், பிற அடியார்களையும் வணங்குவார் கண்ணபிரான் திரௌபதியின் பாத்திரத்தி லிருந்த ஒருதுளி உணவை உண்டு மகிழ்ந்தபோது, துருவாசரும் அவரோடுவந்த முனிவர் பலரும் வயிறார உண்டு மகிழ்ச்சியுற்றன ரல்லவா? ஆக ஈசனுக்குச் செய்யும் பணி விடைகளின் மூலமாகத் தமக்குரிய கடமையையும் பிறமக்கட்குச் செய்யவேண்டிய கடமையையும் நிறைவேற்றினர் பெரியார். இதுவே பிற்கால அன்பர்பற்றிய பக்தி நெறியாகும்.

இனித் தற்காலத்திற்கு இயைந்தமுத்தி நெறி யாது என்பதை ஆராயவேண்டும். முற்கூறிய இருவகை நெறிகளும் மக்களைப் பேரின்பக் கரைக்குச் செலுத்தின; பாரதநாட்டிற்குப் பெருமையை அளித்தன. உலகத்தார் அனைவரும் பிறவித் துயரை ஒழிக்கவேண்டி, வந்து பிறக்க ஆசைப்படும் ஞான வளநாடென அதைப் போற்றுமாறுஞ்செய்தன; ஆயினும், இன்று பாரதநாடு பரிதவிக்கும் நிலையிலுள்ளது வெளிப்படை. பசியும் பிணியும் பகையும் ஒழியாது வாழும் நாடு இதைப்போன்றது வேறில்லை ஜன சமூகம் இங்கே ஒற்றுமை யின்மையாலும் கல்வி யின்மையாலும் நாகரிகமின்மையாலும் அடிமைத் தன்மையாலும் வலியிழந்து சீர்குன்றிக் கேடடைந்து வருகின்றது. பிறமதத்தினர் நமது மக்களைப் பறித்துத் தம் மதத்தினராக்குகின்றனர் இந்நிலையில் நமக்கும் பிறர்க்கும் ஈசனுக்கும் செய்யவேண்டிய மூவகைக் கடமைகள் எவையெவை யென்பதைத் தெளியவேண்டும். எந்த ஒரு கடமையை நிறைவேற்றுதல் மூலமாக மற்ற இரண்டையும் நிறைவேற்றக்கூடும் என்பதையும் ஆராயவேண்டும். வாய் வேதாந்தமே இன்று முழக்கி வருகின்றது. ஆன்மசக்தியோ அருகி வருகின்றது. நம்நாடு உய்வடைய ஞான பலமே வேண்டும். ஞானவாழ்க்கை வலுக்கவேண்டும். ஆனால் நமது நாடு பாழடைந்து வரும்போது, நாம் நாட்டை

தொடர்ச்சி 5-ம் பக்கம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வகுப்புவாதப் பிரசாரம்

## தமிழருக்குப் பாராட்டு

ஒருசில சிங்களப் பத்திரிகைகள் தமிழர்க்கும் ஏனைய சிறுபான்மையினர்க்கும் விரோதமான கட்டுரைகளைப் பிரசுரித்து வந்தமையை நாம்பலமாகக் கண்டித்து வந்திருக்கிறோம். இலங்கையின் ஜனத் தலைவர்களில் ஒருவரும், ஐக்கிய தேசீயக்கட்சிப் பிரசாரகராகவும், பகிரங்கவேலைப் பகுதி மந்திரியுமான கௌரவ மிஸ்டர் ஜே. எல். கோத்தலாவலை இவ்விஷயமாக எமக்கோர் கட்டுரை எழுதியுள்ளார். கேவல வகுப்புவாதப் பிரசாரணத்தால், எங்கள் நாடு ஓர்போதும் முன்னேறாதென்றும், அத்தகைய பிரசாரணங்களைச் செய்வோர், எச்சமூகத்தைச் சேர்ந்தவராயினுஞ்சரி, நாட்டின் சத்துருக்களே யென்றும், மிஸ்டர் கோத்தலாவலை கூறுவதை நாம் வரவேற்கிறோம். கட்டுரை வருமாறு:—

இலங்கையின் முதலாவது பாராளுமன்றம் அமைக்கப்பெறும் காலம் மிகவும் நெருங்கும் இச்சமயத்தில் ஒருபுறத்தில் தேசத்தின் தலைவர்கள் தேசீய ஒற்றுமையை உண்டுபண்ண அல்லும் பகலும் பணியாற்றி வருகையில், மற்றொரு புறத்தில் சில சிங்களப் பத்திரிகைகள் மிகவும் கேவலமான முறையில் தமிழ்ச் சமூகத்தை நிந்தித்தும் தனிப்பட்டவர்களைத் தூஷித்தும் வருவதாகத் தெரிகிறது. இதை நான் மிகவும் கண்டிப்பதுடன் இதைக் குறித்து எனது மனவருத்தத்தையும் தெரிவிக்கிறேன். சிற்சில பத்திரிகைகள் பொறுப்பற்ற முறையில் குறும்புத்தனமான கட்டுரைகளை வரைவதற்கு ஐக்கிய தேசீயக்கட்சி எவ்விதத்திலும் பாத்திரவாளியல்ல.

ஐக்கிய தேசீயக்கட்சி பல்வேறு சமூகத்தினரையும் உள்ளடக்கிய வகுப்புவாதமற்ற கட்சியாகும். இது சாதி, மத, வகுப்பு வேற்றுமைகளைப் பாராட்டாதது. இது சம்பந்தமாக நமது தலைவர் திரு. டி. எஸ் சேனநாயக்கா ஐக்கிய தேசீயக் கட்சி ஆரம்பவிழாவில் தமது தலைமையுரையில் குறிப்பிட்ட சில வார்த்தைகளை இந்தச் சந்தர்ப்பத்தில் கூறுகிறேன்:—

### சமூகவாதத் தாபனமல்ல

"நமது தாபனம் ஓர் சமூகவாதத் தாபனமல்ல வென்பதை நன்குணர்த்த வேண்டும். அதை நான் திரும்பவும் கூறுகிறேன். இலங்கையிலுள்ள சகல சமூகங்களின் பிரதிநிதிகளும் நமது அரசியற்றிட்டத்தை ஏற்றுக்கொண்டனர். ஐக்கிய தேசீயக்கட்சி அச்சமூகங்கள் யாவையும் உள்ளடக்கியதாகும். நாம் ஏற்படுத்திக்கொண்ட தேசீய ஒற்றுமையைக் குறித்து நாம் பெருமையடையலாம். ஓர்கட்சியென்ற முறையில் நமது ஒற்றுமை நீடிக்கவேண்டுமென்பதே எங்கள் நோக்கம். புதிய அரசியல் திட்டத்தில் சமூகவாதத்திற்கு இடமேயில்லை. புதிய பாராளுமன்றத்தில் சமூகவாத அரசியலுக்கு இடமேயில்லை. புதிய பாராளுமன்றத்தில் சமூகவாதிகளுக்கு இடமிருக்காதென நான் நம்புகிறேன்".

### தமிழருக்குப் பாராட்டு

மாபெருந் தமிழ்த் தலைவர்களான காலஞ்சென்ற சேர். பொ. இராமநாதன் காலஞ்சென்ற சேர். பொ. அருணாசலம், பழைய சட்டசபையிலும் பின்னர் அரசாங்கசபையிலும் அங்கத்துவம் வகித்த காலஞ்சென்ற திரு. ஈ. ஆர். தம்பிமுத்து பழைய சட்டசபையில் கொமிற்றிகள் தலைவராகவிருந்த காலஞ்சென்ற திரு. எம் சுப்பிரமணியம் ஆகியோர் சிங்களத் தலைவர்களுடன் ஒத்துழைத்து இத்தேசத்திலுள்ள எல்லாச் சமூகத்தினர்க்கும் ஆற்றிய அரும்பெரும் சேவைகளுக்காக அவர்களை நான் பாராட்டுகிறேன். சேர் அருணாசலத்தின் புதல்வரான திரு. அ. மகாதேவா மந்திரிசபையினருடன் ஒத்துழைத்து, உள்நாட்டு மந்திரியென்ற முறையில் தமிழ்ச் சமூகத்தின் நலவுரிமைகளுக்காகப் பெரிதும் பணியாற்றி வருவதைத் தமிழ் மக்கள் அறியாதவர்களல்ல.

தமிழ் மக்களின் ஒத்துழைப்பைக்கோரி திரு. டி. எஸ். சேனநாயக்கா கட்சியின் ஆரம்பவிழாவிற் குறிப்பிட்ட வார்த்தைகள் பின்வருமாறு:

"இப்போதைய நூற்றாண்டின் முதல் 25 வருட காலத்தில் சேர் பொன்னம்பலம் அருணாசலம்போன்ற தமிழ்த் தலைவர்கள் சிங்களத் தலைவர்களுடன் தேசநலத்துக்காக ஒத்துழைத்தனர். 1931-ம் ஆண்டு யாழ்ப்பாணக் குடாநாட்டில் நடைபெற்ற டொனமூர் அரசியற் சட்ட மறுப்பு இயக்கம் ஓர் பிரிவினரின் புகாரை அடிப்படையாகக் கொண்டதல்ல வென்பதையும் டொனமூர் அரசியற் றிட்டம் இலங்கை மக்களுக்குப் போதுமானதென்னும் போலி நம்பிக்கை தவறென்பதை உணர்த்தும் பொருட்டு ஆரம்பிக்கப்பட்டதென்பதையும் நாம் மறந்துவிடக் கூடாது. அப்பொழுது யாழ்ப்பாணத்து மக்களே அரசியல் அரங்கத்தின் முன்னணியில் நிற்கின்றனர். இப்பொழுதும் அவர்கள் நம்முடன் ஒருமித்து வழிநடத்தலாம்".

இன்று தமிழ்க்காங்கிரசின் தலைவராகவிருக்கும் திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் தற்காலிக போக்குவரத்து மந்திரி பதவியை வகித்ததுண்டல்லவா? அவரை மந்திரியாக நியமிப்பதற்கு நானே பெரிதும் உதவிபுரிந்தே னென்பதை இதில் கூற விரும்புகிறேன். நாம் வகுப்புவாதிகளாகவிருந்தால் திரு பொன்னம்பலத்தை மந்திரியாகத் தெரிவு செய்திருப்போமா?

நமது கட்சித் தலைவர் நமது முதற் கூட்டத்திற் குறிப்பிட்டவாறு, வகுப்புவாதம் வகுப்பு வாதத்தையே உண்டுபண்ணும்! வகுப்புவாதத்தையே அடிப்படையாகக்கொண்டு நாம் எவ்வித நடவடிக்கைகளையும் எடுத்தால் இத்தேசம் முன்னேறுவது அசாத்தியமாகும். ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு, வகுப்புவாதத்தால் வருந்தாழ்வு. மிக்க புகழ்பெற்ற பெரிய தேசமான இந்தியாவின் இன்றைய நிலையைச் சற்று நோக்குங்கள். சமூக வேறுபாடுகளின் விளைவாக அங்கேற்பட்ட பிரிவினையால் அக்கண்டத்தின் பலம் குன்றிவிட்டது. நமக்கு அக்கதி ஏற்படக் கூடாது. நாம் அனைவரும் இலங்கையரே! இலங்கை நமது சொந்தநாடு என்ற உயரிய நோக்குடன் நாம் ஒன்றுபட்டு வாழ்வோமாக!

# "கதிர்காமம்"

## கொழும்பில் நூல் அரங்கேற்று விழா

(நமது நிருபர்)

நிகழும் சர்வசித்து ஆண்டு ஆடி மாதம் 14ந் திகதி 30 7-47 மாலை $7\frac{1}{2}$ மணியளவில் வெள்ளவத்தை உபயகதிர்காமம் என்னும் திருக்கோயிலிலே முதலியார் குல சபாநாதன் அவர்கள் எழுதிய "கதிர்காமம்" என்னும் ஆராய்ச்சிநூல் அரங்கேற்றப்படுவதாயிற்று. மிகப் பரந்த சன சமுத்திரம், மின்சார ஒளி விளக்குகள், எப்புறத்தும் முருகன் புகழ் வாசகங்கள் ஒட்டிய மட்டைகள், தோரணங்கள், கமுகுகள், வாழைகள். இளநீர்கள் இவையெல்லாம் அக்கோயிலின் புறத்தை ஒரு விண்ணுலகம்போல ஆக்கிக்கொண்டிருந்தன. விழாவிற்குத் தலைமை வகித்தவர் பழநி, வேதசிவாகம பாடசாலைப் பேராசிரியர், சைவசித்தாந்த சரபம் சைவத்திரு ஈசானசிவாசாரிய சுவாமிகள் ஆவார். இலங்கையின் பல பாகங்களிலுமிருந்து பண்டிதர்களும் புலவர்களும் வந்து கொழும்புத்தமிழ் மக்களுடன் பன்னூற்றுக் கணக்கான முருகனடியார்களுடனும் கூடியிருந்தனர். அவர்களுள் வித்தியாபகுதிப் பிரதி வித்தியாதிபதி திரு. கே எஸ். அருள்நந்தி, பல்கலைக்கழகத் தமிழ்ப் பேராசிரியர் டாக்டர் கே. கணபதிப்பிள்ளை, டாக்டர். இராசேந்திரம், பண்டிதை இ. பத்மாசனி அம்மையார் சோ. சிவபாதசுந்தரம், பெரியதம்பி, கே. இலக்குமண ஐயர், சோ. நடராஜன் ஆகியோரும் கொழும்புப் பகுதியிலுள்ள தமிழ்க்கல்லூரி விரிவிரையாளர் பலரும் குறிப்பிடத்தக்கவராவர்.

வித்துவான், பண்டிதர் கா. பொ இரத்தினம் தமது வரவேற்புரையில் தொல்காப்பியர்கால முதலாகப் பழைய தமிழ் நூல்களெல்லாம் அரங்கேற்றப்பட்டு வந்தனவென்றும், அத்தகைய நூல்களே சிறந்து விளங்குகின்றன வென்றும் இலங்கையில் நூல் அரங்கேற்று வைபவம் இதுவே முதலாவ தென்றும் குறிப்பிட்டார்

தலைவரவர்கள் தமது தலைமைப் பேருரையில, கதிர்காமத்தின் தலப் பெருமையைக் கூறி திரு குலசபாநாதன் அவர்களது நேரிய ஆராய்ச்சி முறையினையும் தமிழ் நடையையும் புகழ்ந்து, முத்துப் போன்ற அச்சழகினைக் குறிப்பிட்டு, நூல்களை இயற்றுவோர்க்கு ஊக்கமளிக்க வேண்டுமென்றும் கதிர்காமத்தைப்பற்றி எழுதப்பட்ட இந்நூல் எல்லோரது கையிலும இருக்கவேண்டுமென்றும் கூறி வற்புறுத்தினார்கள்.

முதலியார் குல சபாநாதன் அவர்கள் பலத்த கரகோஷத்தினிடையே தமது நூலை அரங்கேற்றுவதற்காக எழுந்தார். பூமாலைகள் ஒன்றன் பின்னொன்றாக அவரை அலங்கரித்தன. கதிர்காமம் என்னும் தமது நூல் மூன்று பகுதியாகப் பிரிக்கப்பட்டிருக்கிறதென்றும் முதலாம் பகுதியில் கதிர்காமச் சரித்திர வரலாறும் இரண்டாம் பகுதியில் அருணகிரிநாதர் காலந்தொட்டு இற்றைநாள் வரை பாடப்பெற்ற பாடல்களும மூன்றாம் பகுதியில் 1894-ம் ஆண்டு தொடங்கி இக்காலம் வரை கதிர்காமத்தைப் பற்றி வெளியான நூல்களின் அட்டவணையொன்றும் சேர்க்கப்பட்டிருக்கின்றது எனக்கூறித் தனித்தனி அத்தியாயங்களில் கூறப்பட்டுள்ள விஷயங்களையும் சுருக்கமாக எடுத்துக் கூறினார். கதிர்காமம் அருணகிரிநாதர் தரிசித்த ஸ்தலமாக விருந்தும் இன்று பரிபாலனம் பிறர் கையில் நன்கு கவனிக்கப்படாம லிருப்பதையும் அழகாக எடுத்துக் காட்டியவர் அங்குள்ள மடங்கள் பொது சனங்கள் கட்டியவையே என்றும் பரிபாலகர்கள் அது விஷயத்தில் அக்கறை எடுப்பதில்லை யென்றும் சிறிது குத்தலாகக்கூறி, தமது நூலினை அரங் கேற்றத்துக்காகச் சபையினருக்குச் சமர்ப்பித்தார்கள்.

திரு க. இராமச்சந்திரன் அவர்கள் இக்காலத்திற் குப்பை குப்பையாக நூல்கள் எழுதப்படுவதைக் காட்டி மூவகை நோக்குகளுடன தமக்கெனவும், தமக்கும் பிறர்க்குமெனவும், பிறர்க்கெனவும் நூல்கள் எழுதப்படுகின்றன வெனக் குறிப்பிட்டார். திரு சபாநாதன் அவர்கள் ஆராய்ச்சிப் பகுதியில் மட்டுமன்றி இடமறிந்து தமது நுண்மதியால் செய்யுட்களைத் தெரிந்தெடுத்து அமைத்த முறையினையும் புகழ்ந்து அந்நூல் ஈழநாட்டிலும் பரத கண்டத்திலுமுள்ள முருகன் அடியார்களுக்கு அர்ப்பணஞ் செய்யப்பட்டது எவ்வளவு பொருத்தம் என்றும் காட்டினார்கள். வித்துவான் வ. மு. கனகசுந்தரம், திரு. சபாநாதன் அவர்கள் சென்ற பல ஆண்டுகளாக இந்தியாவிலும் இலங்கையிலும் வெளிவருகின்ற வெளியீடுகளில் எழுதி வந்த ஆராய்ச்சிக் கட்டுரைகளே அவர்களின் திறமைக்குப் போதிய சான்றெனக் கூறி அந்நூலின் இரண்டாம் பதிப்பு விரைவில் வெளிவரச் செய்வது தான் எமது கடன் என்றார்கள். திரு. அருள் தியாகராசா அவர்கள் பேசுகையில், முதலியார் சபாநாதன் அவர்களுடைய சங்க நூலாராய்ச்சியைப் போற்றி மற்றைய சைவாலயங்களின் வரலாறுகளும் விரைவில் வெளிவர வேண்டுமென்றார்கள். திரு. மு. கணபதிப்பிள்ளையவர்கள் நூலாசிரியர் முதலியாரவர்களைத் தமிழுலகு நன்கு அறியுமென்றும், அவர்களது ஆராய்ச்சி நடுநின்ற செம்மையது என்றும், பாரிய கந்தோர் வேலைகளுக்கிடையே இவ் வேலையையும் முதலியாரவர்கள் மேற்கொண்டு முடித்தது போற்றத்தக்கது என்றும் குறிப்பிட்டு, இந்நூல் அரங்கேற்றுவிழா இலங்கைத் தமிழர் சரித்திரத்தில் பொன்னெழுத்துக்களாற் பொறிக்கப்பட வேண்டியதென்றும் கூறி முடித்தார்கள்.

ஈற்றில, முதலியாரவர்களால் தொகுக்கப்பட்டு நூலகத்தே மிளிரும் பாடல்கள் சிலவற்றைத் திரு. தி, மாணிக்கவாசகரவர்கள் கனிவுடன் பாடினார்கள், விழா 10-30மணியளவில்இனிதுநிறைவேறியது.

ஈற்றில், விழாவின்போது விற்கத் தொடங்குகையில் கதிர்காம தொண்டர் சபைத் தலைவர் திரு. க. மதியாபரணம் பெருந் தொகைப் பணங் கொடுத்து ஆசிகூறி முதற் பிரதியினை நூலாசிரியரிடமிருந்து வாங்கி விற்பனையை ஆரம்பித்து வைத்தார்கள்.

---

### ஓர் புதிய கொம்மிஷனர்

வட்டுக்கோட்டை பிரபல நியாயதுரந்தரரும் நொத்தாரிசும் ஆகிய ஸ்ரீமாந். எம். கதிரவேலு அவர்கள், யாழ்ப்பாணப் பகுதிக்கு, சத்தியவாசகம் பெறக் கூடிய ஓர் அதிகாரியாக (Commisioner of Oaths) நியமிக்கப்பட்டிருக்கிறார் என்று அறிந்து மகிழ்கிறோம்.

# பூரண சுயராச்சியம்

## அடுத்த ஆண்டிற் கிடைக்குமா?

சென்றமாதம், பிரிட்டிஷ் பாராளுமன்றத்திலே குடியேற்றநாட்டு மந்திரி, இலங்கைக்கு அரசியல் முன்னேற்றம் அளிக்க விருப்பதைப்பற்றிப் பிரஸ்தாபித்து ஓர் அறிக்கை வெளியிட்டபோது, இது ஓர் ஏமாற்றுவித்தை என்றும், இலங்கை மக்களை ஏமாற்றச் செய்யும் ஓர் பெரிய சூழ்ச்சி என்றும் ஓர் சாரார் கூறிவந்தனர். தென் ஆபிரிக்கா, ஐயர்லாந்து, கனடா முதலாம் நாடுகளுக்கு அளிக்கப்பட்டதும் இந்தியாவுக்கு வருகிற 15ந் திகதி அளிக்கப்படவிருப்பதுமான டொமினியன் அந்தஸ்திலும் பார்க்கக் குறைந்த ஓர் அந்தஸ்தையே இலங்கைக்கு வழங்கப்போகிறார்கள் என்றும் பிரசாரம் செய்யப்பட்டு வந்தது.

இவ்விஷயமாக இலங்கைத் தேசாதிபதியும், சேர் ஒலிவர் குணதிலகாவும், குடியேற்றநாட்டு மந்திரியைக் கண்டு சம்பாஷணை செய்தனர். அதன் பயனாகக் குடியேற்றநாட்டு மந்திரி சென்றவாரம் பாராளுமன்றத்திலே முக்கியமான ஓர் அறிக்கையை விடுத்தார். "இலங்கைக்கு நாம் அளிப்பதாகக் கூறிய அரசியல் முன்னேற்றம், மற்றும் நாடுகளுக்கு வழங்கப்பட்டுள்ள டொமினியன் அந்தஸ்துக்கு எவ்வாற்றானும் குறைந்ததல்ல" என்று குடியேற்றநாட்டு மந்திரி மிஸ்டர் கிறீச் ஜோன்ஸ் பட்டவர்த்தனமாகத் தெரிவித்துவிட்டார்,

இது [illegible] றெட்பிரஸ் செய்தி ஸ்தாபனம் தெரிவிப்பதாவது:-

"வருகிற பிப்ரவரிமாதம் தொடக்கமாக இலங்கையிலே டொமினியன் அந்தஸ்து என்று சொல்லப்படும் பரிபூரண சுயராச்சியம் வழங்கப்படப்போகிறது அந்த வைபவத்தை, மாட்சிமை தங்கிய மன்னர் குடும்பத்தில் உள்ள ஒருவரே ஆரம்பித்துவைப்பார் என்றும் தெரிகிறது டொமினியனாக வரும் இலங்கையின் முதற் கவர்னர் ஜெனரலாக சேர் மொங்க் மேஸன் மூரே இருப்பர் என்று இப்போது நிச்சயமாகத் தெரிகிறது".

---

### அகில இலங்கைச் சுகாதார வாரக் கொண்டாட்டம்

குறித்த கொண்டாட்டம் 25-7-47 காலை, சுகாதாரப் படங்களா லலங்கரிக்கப்பட்ட ஆனையிறவு அரசினர் பாடசாலை மண்டபத்துள் கிளிநொச்சி அரசினர் பாடசாலைத் தமிழ், சிங்கள மாணவர்கள், ஆசிரியர், தட்டுவன்கொட்டி தமிழ்ப்பாடசாலை மாணவர், ஆசிரியர்; சமூகத்தில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

யாவரும் உப்பளத்துக்குப் பவனி சென்ற காட்சியும் சுகாதார தேசிய சேமிப்பு இயக்கத் துண்டுப் பிரசுரங்கள் வழங்கப்பட்ட காட்சியும் சுகாதார பரிசோதகர் திரு. S. மயில்வாகனம் அவர்களின் ஒத்துழைப்பும் இவண் குறிப்பிடத்தக்கன.

—கடித.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருச்சி ரேடியோ

புதன் ஆகஸ்ட் 6

காலை 7-15 கீதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 பாலம் ராமமூர்த்தி பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 பல்லடம் சஞ்சீவிராவ் புல்லாங்குழல் 8-30 வி எஸ் சக்ரசிவம் பாட்டு 9 முடிவு

1 கதம்பம் இசைத்தட்டு 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1.40 ஜீ தேவராஜ் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2.05 ஜி தேவராஜ் பாட்டு 2-15 கல்வி ஒலிபரப்பு 2-45 ஒலிபரப்பு முடிவு.

மாலை 5 பி கே விஸ்வநாதசர்மா வயலின் 5-40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6-15 கிராமநிகழ்ச்சிகள் 7 ஸஅயோதனன் நாடகம் 7-15 சித்ரகானம் இசைத்தட்டு 7-30 தமிழில் செய்திகள் 7-45 ரேடியோ வாத்யகோஷ்டி 8 பாலம் ராமமூர்த்தி பாட்டு 8-30 பி கே விச்வநாதசர்மா வயலின் 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 ஆங்கிலப் பேச்சு 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் வானிலை 9 45 ஐரோப்பிய சங்கீதம் இசைத்தட்டு 10 30 முடிவு.

வியாழன் ஆகஸ்ட் 7

காலை 7-15 கீதாரம்பம் 7–20 தமிழில் செய்திகள் 7-30 ஆர் எஸ லலிதாபாய் சாமண்ணு வீணை 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8.15 வாத்ய இசை இசைத்தட்டு 8-30 யாழ்ப்பாணம் என் ஷண்முகரத்தினம் பாட்டு 9 முடிவு

1 கதம்பம் இசைத்தட்டு 1 30 ஆங்கிலத்தில் செய்திகள் 1–40 பெண்ணுலகம் 2 தமிழில் செய்திகள் 2-05 சித்தார் சுப்பிரமணியபிள்ளை இசைத்தட்டு 2 15 கல்வி ஒலிபரப்பு 2-45 முடிவு

மாலை 5 ஆர் எஸ் லலிதாபாய் சாமண்ணு வீணை 5-40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6 10 அறிவிப்புகள் 6-15 கிராம நிகழ்ச்சிகள் 7 நந்தனர் இசைத்தட்டு 7-15 செய்தி விளக்கம் 7-30 தமிழில் செய்திகள் 7-45 டி ஆர் நவனீதம் புல்லாங்குழல் 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 குரல்வகை இசைத்தட்டு 9 30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் வானிலை 9-45 யாழ்ப்பாணம் என் ஷண்முகரத்தினம் பாட்டு 10-30 முடிவு

வெள்ளி ஆகஸ்ட் 8

காலை 7-15 கீதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 எஸ் ஜயா எஸ் ஸ்ரீமதி பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8–15 திருச்சி வாத்யகோஷ்டி 8–30 எஸ் எ மணி பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 எஸ் ஜயா எஸ் ஸ்ரீமதி பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 எஸ் ஜயா எஸ் ஸ்ரீமதி பாட்டு 2-15 கல்வி ஒலிபரப்பு 2–45 முடிவு

மாலை 5 சுவாமிமலை எஸ் கலியாணசுந்தரதேசிகர் பாட்டு 5 40 குரான் ஷரீப் விளக்கம் 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6-15 கிராம நிகழ்ச்சிகள் 7 திருவாரூர் எஸ ராஜரத்தினம்பிள்ளை நாகஸ்வரம் 7 30 தமிழில் செய்திகள் 7-45 அன்னியர் தொடர்பு வேண்டுமா? 8 சுவாமிமலை எஸ் கலியாணசுந்தர தேசிகர் பாட்டு 8-30 திருவரூர் எஸ் ராஜரத்தினம்பிள்ளை நாகஸ்வரம் 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 தென்னிந்திய நாட்டுப் பாடல்கள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9.40 அறிவிப்புகள் வானிலை 9-45 குரல்வகை இசைத்தட்டு 10 நீங்கள் கேட்டவை இசைத்தட்டு 10-30 முடிவு

## காரைநகர்ச் சைவமகாசபை

இச் சபையாரால் பல ஆண்டுகளாக "ஆலயவழிபாடு" என்னும் விஷயமாகச் செய்யப் பெற்று வந்த பிரசங்கங்களின் உயரிய கொள்கைகளை அநுஷ்டானத்தில் நடைபெறச் செய்யும் வழிகளை ஆராயும் சைவ அன்பர்களின் மகாகூட்டம் கருங்காலிச் சுப்பிரமணிய சுவாமி ஆலயத்தில் நிகழும் ஆடி மாதம் ௨௬௨ (10.8.47) ஞாயிற்றுக்கிழமை இரவு 6½ மணியளவில் நடைபெறும். அவ்வமயம் சைவப் பெரியார் ஸ்ரீமத். சி. சுப்பிரமணியர் தேசிகர் அவர்கள் தலைமையில் பண்டிதர் சு இராமசாமி அவர்கள் "ஆலய வழிபாட்டின் உயரிய கொள்கைகள்" என்னும் விஷயமாகப் பிரசங்குஞ் செய்வாரெனத் தெரிவிக்கப் படுகின்றது.

## நென்மயிலைச் சன்மார்க்க சபை குரும்பசிட்டி

29-7.47 இல் கூடிய டை சபையின் நிர்வாகசபை கீழ்க்காணும் பிரேரணையை ஏகமனதாகத் தீர்மானம் செய்தது,

"செந்தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளையும் உரியபருவத்து அவ்வத் துறை நின்று பயின்று பெரும்புலமை படைத்து, சமஸ்கிருத மொழி வல்லுனராய்த் திகழ்ந்து, ஈழநாட்டிலன்றித் தென்னாட்டிலும் வடநாட்டிலும் புலவர் பலர் மதிப்புக் குரியராகி, ஈழத் தேசக் கலைப் பீடப் பேராசிரிய ஸ்தானங்களை அலங்கரித்து, அழிந்தொழிந்த பண்டைய இசைக் கருவியாகிய 'யாழை' தமது நுண்மாண் நுழைபுல ஆராய்ச்சியால் தமிழ் உலகுக் குதவிய ஈழத்துமணி உயர்திரு சுவாமி விபுலானந்தஜி அவர்களது அகால மரணம் தமிழுலகிற்கு ஈடுசெய்யமுடியாத பெரு நஷ்டமாகும். அதனல் இன்று பெருந்துயர் அடையும் தமிழ்மக்களுக்கும் சுவாமிஜி அவர்களது அன்பர்களுக்கும் எமது அநுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம் சுவமிஜீ அவர்களது ஆன்மா சாந்தி யடைவதாக."


## விளம்பரம்

### எள்ளுப் பிண்ணுக்கு

யாழ்ப்பாணம் உதவி ஏஜண்டாகிய நான், 1947–ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 30-ந திகதிவரை எனக்குத் தேவையான எள்ளுப் பிண்ணுக்கைத் தரக் கூடிய வியாபாரிகளிட மிருந்து விலையை அறிய விரும்புகிறேன். மனுப்பண்ண விரும்புவோர் யாழ்ப்பாணங் கச்சேரியில் முன் தொகையாக ரூபா 50 ஐம்பது) கட்டி குறிக்கப்பட்ட பத்திரத்தைப் பெற்று அதன்மூலமாக ஆகஸ்டு மாதம் 7 ந் திகதிக்கு முன்பாகத் தங்கள் விலைகளைத் தெரிவிக்கவும்.

இங்ஙனம்
ம. ஸ்ரீ சாந்தா
உதவி ஏஜண்டர்

யாழ்ப்பாணம்
30—7—47.

G 72 5.8.47

## விளம்பரம்

### செவ்ளெற் கார் விற்பனை

X 1439, 6 சிலிண்டர், 1947 ம் ஆண்டு லைசென்ஸ் பெற்றதும் பெற்றோல் கூப்பன்கள் உள்ளதுமான செவ்ளெற் கார் விற்பனைக்கு இருக்கிறது. 4 ரயர் (Tyres) மற்றும் உறுப்புகள் (Parts) யாவும் நல்ல நிலைமையில் இருக்கின்றன. தேவைப்படுவோர் கீழ்க்காணும் விலாசத்திலிருந்து வேறு விபரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

எஸ். எஸ். மயில்வாகனம்
கௌரவ காரியதரிசி
மோட்டார்ரத ஐக்கிய சங்கம்
முல்லைத்தீவு.

முல்லைத்தீவு
31—7—47.

M 104 5.8.47— 12 8.47

## தமிழ்

### ஆசிரிய தராதரப்பத்திரப் பரீட்சை

ஆசிரியர் போதனகல்லூரி
ஆசிரியர்களால் வகுக்கப்பட்ட
பாடத்திட்டம்

முதலாம் அல்லது இரண்டாம் பகுதி
முதலாம் பாடம் ரூபா 7 50
அடுத்தஒவ்வொருபாடத்துக்கும் 5 00

அற்லஸ் ஹால்
தபாற் பெட்டி இல. 649
கோழும்பு

Std 19 15-7 — 26-8-47 (செ)

உங்கள் வியாபாரம்

விருத்தியுற

வேண்டுமா?

*

அப்படியானல்

இந்துசாதனத்தில்

விளம்பரஞ் செய்யுங்கள்

## கொழும்பு—சிங்கப்பூர் கப்பல் பிரயாணம்

மாதம் ஒருமுறை ஒழுங்காகச் செல்லும் கப்பலில் பிரயாணச்சீட்டு எம்மூலம் பெற்றுக்கொள்ளலாம். பிரத்தியேக வண்டியில் யாழ்ப்பாணமிருந்து பிரயாணம், கொழும்பில் தங்கும் வசதி யாவும் குறைந்த செலவில் ஏற்பாடு செய்யப்படும்.

நாகபட்டணம் பினங் பிரயாணிகளின் கட்டணம் 130 ரூபாவாக்க் குறைக்கப்பட்டிருக்கிறது.

விபரம்:

எஸ். ஆர். எஸ். நாதன்,
21/3, ஸ்ரான்லி ரோட் யாழ்ப்பாணம்
[வின்சர்-வெலிங்டன் படமாளிகைகளின் மத்தியில்]

Std 23. 6-6-47—6-6-48

உ
சுகமயம்
முல்லைத்தீவு, குமாரபுரம்

### ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமிகோவில்

## திருப்பணி விஞ்ஞாபனம்

இச் சுப்பிரமணியதலத்தின் தோன்மை, மகிமை என்னும் இவைகளைப் பற்றிச் சைவ மக்கள் பலர் அறிவர், சைவாபிமானிகள் காலந் தோறும் உதவிவரும் தருமப்பொருளைக் கொண்டே இத் திருக் கோவிலின் திருப்பணி நிறைவேறி வருகின்றது.

இப்பொழுதும் இத்திருக்கோவிலிலுள்ள விநாயகர் ஆலயத்தின் எஞ்சிய திருப்பணி திருமஞ்சனக் கிணறு ஸ்தம்பமண்டபம், மகாமண்டபத்தின் கிழக்கு தெற்கு வாசல்களுக்குக் கதவுகள்அமைத்தல், இரண்டுமண்டபங்களுக்கும் நிலத்திற்கு சீமன் கொங்கிறிற் இடுதல், வாகனசாலை களஞ்சியம் சுற்றுமதில் என்னும் இவைகளைச் செய்து நிறைவேற்றவேண்டி யிருப்பதால் தங்கள் தங்களாலியன்ற பொருள் உதவி, மேற்படி திருப்பணிகளை நிறைவேற்றிவைக்கும் வண்ணம் கேட்டுக்கொள்ளுகிறன்.

"போர்பொழு தருந்துணை புரிந்த புண்ணியர்"

இங்ஙனம்,
குமாரபுரத் திருப்பணித் தொண்டன்,
கு. பரமசாமிக் குருக்கள்.

Std 26 —1.7-47 30 9-47

## பசந்த லேகியம்

இதனல் மூலச்சூடு, இருமல் பித்தப் பாண்டு, குன்மவாய்வு, நெஞ்செரிவு, கைகால் வலி, அசதி, அஜீரணம், வயிற்றுப் பொருமல், புளித்த ஏப்பம், மலச் சிக்கல், பீனிசம், பார்வைக் குறைவு, வெள்ளை, சூலை, சந்து வாய்வு, பிரமேகம் முதலிய வியாதிகள் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கும். இந்திரியம் கட்டுப்பட்டு, தேக புஷ்டி, வஜீகரம், பலம் முதலானவை உண்டாகும்.

ஸ்திரீகளுக்குண்டாகும் பிரதானமான வியாதியாகிய சூதகக்கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல கொடிய உபத்திரவங்கள் தீர்ந்து மாதவிடாய் குறைந்து அல்லது அதிகமாய்க்காணுதலால்நேரிடும் பல நோய்களும் தீர்ந்து, தேகத்துக்குப்பலம் உண்டாக்கும்.

ஒருறாத்தல் விலை ரூபா 25
அரைறாத்தலுக்கு ரூபா 12-50
கால்றாத்தல் ரூபா 6-25

விலாசம்:

க. ஆறுமுகம்பிள்ளை
கி. 156, செக்கடித்தெரு கொழும்பு

Std. 1. 26—3—47 to , 1—4-48

## கந்தசாமி வைத்தியர்

### அமிர்த சர்க்கரை லேகியம்

தாதுவிருத்தி யுண்டாகி நரசிங்கம் போன்ற தேக பலத்தைத் தருவதில் இணையற்ற லேகியம். நெடுநாட்பட்ட வாதங்கள் எவற்றையும் தீர்க்கும். பித்தக் கிறுதி பாண்டு குன்மம் நித்திரையின்மை மூளைக் குழப்பம் இருமல் அரிகுரல் குட்டம் புண் மலக்கட்டு மூலவாய்வு அசீரணம் இவைகளை மாற்றி நல்ல பசி உண்டாக்கும். மேகம் மேகத்தடிப்பு நீரழிவு நீர்க்கடுப்பு நீங்கும். கெற்பனிகட்கு உண்டாகும் வாந்தி அரோசியம் இருமல் மலசலக்கட்டு நீங்கும். கருவை அழியாமல் காக்கும். பாலர்கட்கு கணை பாண்டு இராக்காய்ச்சல் இருமல் தீர்க்கும் இணையற்ற சஞ்சீவி.

பெரியவர்கள் காலை மாலை 1 கழஞ்சு வீதம். சிறியவர்கள் காற் களஞ்சு அரைக்கழஞ்சு வீதமும் சாப்பிடலாம்

**கால் றாத்தல் விலை ரூபா 5-00**

வீ. பீ. பி யில் அனுப்புவோம்.

விலாசம்:

ஆயுள்வேத சிவசோதி மெடிக்கல்ஹோல்
— வல்வெட்டித்துறை —

Std 25 1-7-47—30-6-48 (செ)

## இந்துசாதனம்

### ஆங்கில-தமிழ்ப் பிரசுரங்கள்

பத்திரக்கிரயம் (முற்பணமாக ஒருவருடத்திற்கு)

| | யாழ்ப்பாணப்பட்டின எல்லைக்குள். | வெளியூர். | மலாய்நாட்டுக்கு |
|---|---|---|---|
| | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச |
| இந்துசாதனத் தமிழ்ப் பிரசுரம் | 6—50 | 9—50 | 10—50 |
| இந்துசாதன ஆங்கிலப் பிரசுரம் | 6—50 | 9—50 | 10—50 |
| இரு பிரசுரங்களுஞ் சேர்ந்து | 10—50 | 13—50 | 15—00 |

பத்திரக்கிரயம் முதலிய பண விஷயம் எதுவும், இந்துசாதன மானேஜருக்கே அனுப்பப்படல் வேண்டும்.

மனேஜர், இந்துசாதனம், வண்ணார்பண்ணை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தபுராணக் கவி நுட்பம்

## திருவிளையாட்டுப் படலம்

வித்துவசிரோமணி ந. ச. பொன்னம்பலப்பிள்ளை யவர்கள் வாய்க் கேட் டெழுதப்பெற்ற பிரதியிலிருந்து எடுத்த அரும் பெருங் குறிப்புக்கள் இப [ ] பகரக் குறியீட்டுடன் வெளிபிடப்பட்டுள்ளன.

வடவரை யும்பர் தன்னில் வானவ ரானோரேகி
யடைதரு கின்றகாலை யாறுமா முகங்கொண் டுள்ள
சடவுள்செய் யாடனேக்கி யவனுருக் காணுகி
யிடருறு மனத்தி னேடு மிருந்தவிந் திரனைக் கண்டார்.

அத்தேவர்களாயுள்ளார் மேருமலைமீது போய்ச் சேரும்போது, ஆறு திருமுகங்களைக் கொண்டருளிய முருகக்கடவுள் செய்யுந் திருவிளையாடலை மாத்திரம் அவதானித்து, (ஆனால்) அப்பெருமானுடைய திருவடியைத் தரிசிக்கப் புலப்படானயச் சஞ்சலத்தோடு கூடிய உள்ளத்துடன் (மேரு மலையிலே) இருந்த இந்திரனைக் கண்டார்கள் என்பது கருத்து.

"தேருறு மனைய தேவர்" என முந்திய திருவிருத்தத்திற் சொல்லப் பட்ட அவர்களையே இத் திருவிருத்தத்தில் "வானவரானோர்" என்றார் வானவரானோர் இந்திரனைக் கண்டார் என முடிக்க; இத்தேவர்கள் தன்னைச் சென்றடைதற்கு முந்தியே இந்திரன் முருகவேள் செய்யுந் திருவிளையாடலால் நேரும் மாறுபாடுகளனைத்தையும் அவதானித்துப் பெருங்கவலையோ டிருந்தா னென்பார் "ஆறுமாமுகங் கொண்டுள்ள—கடவுள் செய்யாடனேக்கியவ னுருக்காணுகி இடருறு மனதினேடு மிருந்த விந்திரன்...." என்றார்; இத் திருவிருத்தம் சுருங்கச் சொல்லல் விளங்க வைத்தல் என்னுஞ் சிறப்போடு கூடியது; முருகக் கடவுள் செய்யுந் திருவிளையாடல்களைக் கண்ட இந்திரன் அவனுருக் காணமை அந்த இந்திரன் செய்த தவக் குறைவே யென்க. (36)

அரிதிரு முன்னரெய்தி யடிதொழு தங்கண் வைகி
விரிகட் லுலகின் வானின் மேவுசான் னிலைமை யாவுந்
திரிபுற வெவரோ செய்தார் தெரிந்தில மவரையீது
புரிகல ரவுணர் போலும் புகுந்தவிப் புணர்ப்டென் னென்றார்.

அத்தேவர்கள் இந்திரன் முன்னிலையிற் சென்று அவனுடைய பாதங்களை வணங்கி (அவனது அனுமதிப்படி) அங்கிருந்து, சரிந்த கடலாற் சூழப் பெற்ற இப் பூவுலகிலும் மேலுலகத்திலும் பொருந்திய பழைய அமைப்பு முழுவதும் மாறுபடும் வண்ணம் எவரோ செய்துள்ளார், அங்ஙனஞ் செய்தவரை யாரென அறிந்திலேம், அசுரர்கள் இதனைச் செய்திருக்கமாட்டார்கள் போலும், இந்த அநர்த்தம் எவ்வாறு நேர்ந்தது என்று கேட்டார்கள் என்பது கருத்து.

சூரபன்மன் முதலிய அசுரர்களால் இச்செயல் செய்தற் கரிதாதலாலும், அங்ஙனந் தான் செய்யினும் இப்பெரும் மாறுதல்கள் சூரபன்மனுடைய இராச்சியத்திற்கே பங்கம் விளைக்குமாதலானும் இதனை யசுரர்கள் செய்திருக்க மாட்டார்களென்பார். "ஈதுபுரிகலர் அவுணர்போலும்" என்றார்; போலும், இங்கே ஐயப்பாட்டைக் குறித்துநின்றது; இவ்வனர்த்தங்களின் காரணத்தைத் தாங்கள் அறிந்து கொள்ளல் முடியாதெனினும் தங்கள் அரசன் அறிந்திருப்பானென்ற எண்ணத்தினால் அவனை வினவுவார் "புகுந்தவிப் புணர்ப்பென் னென்றார்" என்க

[ அரி-இந்திரன்; இவ்விந்திராதி தேவர் பெருந்தவஞ் செய்திலராதலின் தெரிந்திலரென்க ] (37)

வானவ ரிறைவ னன்னோர் மாற்றமங் கதனைக்கேளா
யானுமிப் பரிசுநாடி யிருநதன னிறையுந்தேரேன்
ஆனதை யுணரவேண்டி னனைவருமேகி யம்பொன்
மேனிகொள் கமலத்தோனை வினவுது மெழுதி ரென்றான்.

இந்திரன் அத்தேவர்கள் கூறியவற்றை அப்பொழுது கேட்டு நானும் இம் மாறுதல்களை யிட்டுச் சிந்தித்துக்கொண் டிருந்தேன், (ஆனால்) காரணத்தைச் சிறிதேனும் உணர்ந்திலேன், உண்மையான காரணத்தை யறிய வேண்டுமானால் நாமெல்லோரும் போய் அழகிய பொன்போன்ற மேனியை யுடைய தாமரை யாசனராகிய பிரமதேவரைக் கேட்டறிவோம், புறப்படுதி ரென்றான் என்பது கருத்து

"ஆறுமா முகங் கொண்டுள்ள கடவுள் செய்யாடனேக்கி யவனுருக காணுகி யிடருறு மனத்தினேடு மிருந்த விந்திரனைக் கண்டார்" என முன்னர்த் திருவிருத்தத்திற் கூறியதற் கியைய ஈண்டும் "யானுமிப் பரிசுநாடி யிருந்தன னிறையுந் தேரேன்" என இந்திரன் வாக்காகக் கூறப்பட்டது; நீங்கள் இம் மாறுதலுக்குக் காரண மென்ன வென்பதை அற்பமேனும் அறியாதிருத்தல் போலவே நானுஞ் சிறிதேனும் அறியே னென்பான் "இறையுந் தேரேன்" என்றா னென்க; பிரமதேவர் சகல வுலகங்களையும் அவ்வுலகங்களிற் பொருந்திய சராசரங்களையும் படைக்குங் கர்த்தவதலின் அவர் இதற்குக் காரணத்தை யறிந்திருப்பரென்ற நம்பிக்கையினால் இந்திரன் "கமலத்தோனை வினவுதும்" என்றா னென்க. அனைவரும் வினவுதும் என்றது இடவழுவமைதி.

[அம்பொன்மேனி கொள் கமலத்தோன் — இரணிய கருப்பனாகிய பிரமதேவர் ]. (38)

# ஸ்ரீமதி சரோஜினி

ஐக்கியமாகாணத்துக்குத் தேசாதிபதியாக நியமிக்கப்பட்டுள்ள டக்ரர் பீதன் சந்திரராய் இப்போது அமெரிக்காவில் நிற்கிறார். அவர் திரும்பி வரும்வரை, ஐக்கியமாகாணத்துத் தேசாதிபதியாகக் கடமை பார்க்க கவியரசி ஸ்ரீமதி சரோஜினிதேவி நியமிக்கப்பட்டிருக்கிறார். பம்பாய், சென்னை மசகாணங்களில் மாத்திரம் இப்போதுள்ள ஐரோப்பிய தேசாதிபதிகள் இருப்பர். மற்ற மாகாணத் தேசாதிபதிகள் யாவரும் வருகிற 15ந் திகதி தொடக்கமாக இந்தியராகவே இருப்பர். பின்வருவோர் தேசாதிபதிகளாக நியமிக்கப்பட்டுவிட்டனர் என்று உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட்டிருக்கிறது

ஸ்ரீ வி. இராஜகோபாலாச்சாரியார்: மேற்கு வங்காளம்.

சேர் S. M. திருவேதி: கிழக்குப்பாஞ்சாலம்

ஸ்ரீஜுத் மங்கல்தாஸ் பக்வாஸ: மத்திய மாகாணம்.

ஸ்ரீஜுத் ஜெய்ராம்தாஸ் டௌலத்ராம்: பீகார்.

டக்ரர் கைலாசநாத் கட்ஜு: ஒறிஸா.

சேர் ஆர்ச்சிபல்ட்நை: சென்னை.

சேர். ஜோன்கொல்வில். பம்பாய்.

ஸ்ரீமதி சரோஜினி: ஐக்கியமாகாணம்

சேர். அக்பர்ஹைதாரி: அஸாம்.

பாகிஸ்தானில், மேற்குப்பாஞ்சாலத்துக்கு சர் பிரான்சிஸ்மூடி என்பவரும், விந்தமாகாணத்துக்கு ஜனப் குலாம் ஹுஸெயின் ஹிதாயத்துல்லாவும், வடமேற்கெல்லைப் புறத்துக்கு சேர் ஜோர்ஜ் கன்னிங்ஹாம் என்பவரும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். கிழக்கு வங்காளத்துக்கு யாரைத் தேசாதிபதியாக்கலாம் என்பதுபற்றி முஸ்லிம்லீக் இன்னும் முடிவுசெய்யவில்லை.

# யூனியன் களியாட்டமும் பொருட் காட்சியும்

யூனியன் கல்லூரி விளையாட்டு மைதானத்தில், ஆகஸ்டு, 6, தொடங்கி 16 வரைக்கும் இவ்விழா நடைபெறும்

ஆகஸ்டு 6 புதன்கிழமை (நாளை) 5 மணிக்கு, மாட்சிமை தங்கிய நீதியரசர் செ. நாகலிங்கம் அவர்கள் இவ்விழாவைத் திறந்துவைப்பார். அரசாங்கப் பகுதியினர், பொருட்காட்சிகள் வைத்து விரிவுரைகளும் செய்வார். கலாவிற்பன்னக் காட்சிகளில் விஞ்ஞான சாயா விநோதங்களும் — சித்திர விசித்திரங்களும்—கைப்பணி மகத்துவங்களும்—பூமிசாத்திரக் காட்சிகளும் அருங்காட்சிதரும். இவ்விழாப்பூரண சித்திதரும் முறையில் அமைக்கப்பட்டிருக்கின்றது. மாவிட்டபுரம் கந்தசாமி கோவிற் றிருவிழாக் காலத்தில் இக்காட்சி அமைக்கப்பட் டிருப்பதும் குறிப்பிடத்தக்கதாம்

# கம்பளைத் தமிழ்ச்சங்கம்

தமிழ்மொழி வளர்ச்சிக்காக உழைத்தலையே முக்கிய நோக்கமாகக் கொண்டு கம்பளையிலுள்ள தமிழ்பேசும் மக்கள் (தமிழர், முஸ்லிம்கள்) கம்பளைத் தமிழ்ச் சங்கம் என்றபெயருடன் ஒரு சங்கத்தை 21-7-47 திங்கட்கிழமை ஆரம்பித்துள்ளார்கள். உத்தியோகஸ்தர் தெரிவு பின்வருமாறு நடைபெற்றது

போஷகர்கள்: 1. திரு. எம். முத்துராஜா (நீதிபதி) 2. ஜனுப் எஸ். எம். சரீப் (கம்பளை நகரசபைத்தலைவர்) 3 பண்டிதர் க. சபா. ஆனந்தர் பீ. ஓ எல். தலைவர் டக்டர் ஈ. த. சரவணமுத்து (டி எம். ஓ.) உபதலைவர்கள் 1 நியாயவாதி திரு. த. சின்னப்பா (கம்பளை நகரசபை உபதலைவர்) 2. வித்தியாதரிசி திரு. வே. சிவகுரு பி. எஸ். ஸி. 3. பண்டிதர் க. சரவணமுத்து. இணைக்காரியதரிசிகள் திரு வே. முருகேசு (ஆசிரியர்) திரு க. சுப்பையா (ஆசிரியர்) தனதிகாரி திரு க. சுப்பிரமணியம், எழுவரைக் கொண்ட ஒரு நிருவாகசபையும் தெரிவுசெய்யப்பட்டது.

பண்டிதர் வீ. ஏ. யோன்பிள்ளை, திரு சோ. நடராஜன் பீ. ஏ. அகிலஇலங்கைத் தமிழாசிரிய சங்கத் தலைவர் திரு. க. ஆறுமுகம், ஆசிரியர் பிரம்ம ஸ்ரீ க. வைத்தீசுவர ஐயர் என்போர் இச்சங்கத்துக்குக் கௌரவ அங்கத்தவர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

# அன்புநெறி

2-ம் பக்கத் தொடர்ச்சி

விட்டுக் காட்டுக்குத் தவஞ்செய்ய முயலலாமா? 'அல்லது எல்லாம் ஈசன்செயல், என்று கருதி, கைகட்டி வாய்பொத்திக் கண்மூடிமௌனியாய்க் கோயிலிலேஈசன் முன்பு தியானத்தில் அமரலாமா? அல்லது கோயிலை மெழுகியும் சுத்தம் செய்தும், மாலை கட்டியும் திருவிளக்கேற்றியும் பொழுதுபோக்கலாமா? தவஞ் செய்தலும் தியானத் தமர்தலும், கோயிற்பணி செய்தலும் மிக மேன்மையான அவசியமான செயல்களேயாம்; பசியும் பிணியும் சண்டையும் மலிந்துள்ள இந்நாளில் அவைகளைச் செய்யும் வசதியும் அவகாசமும் திறமையும் பெற்றுள்ளவர் எத்தனை பேர்? வயிறு காயும்போது வேதாந்தம் பயன்படாது; தமோ குணத்தில் மூழ்கியுள்ள நம்மிற் பெரும்பாலார்க்குத் தியானமும் தவமும் பூஜையும் தகுதியுள்ளவை யாகா. நமது குடும்பத்தாராகிய சமூகத்தார்க்குச் செய்யவேண்டிய கடமைகளை அறிந்து செய்தலே நமக்கு ஏற்ற தருமநெறியாகும் நமது தாய்நாடும் அதன் கல்விச்செல்வமும் பழமையானசனசமூகத்தில் உயர்வுள்ள மனப்பான்மையும் இலக்கியங்களும் சம்பிரதாயங்களும் நமது முன்னோர் நமக்கெனத் திரட்டி வைத்த ஒப்பரிய காணியாகும். —வரும்,

# உதவி நன்கொடைபெறும் பாடசாலைகளின் உயர்வு

### சுவாமி விபுலானந்த அடிகளாருக்கு மௌனப் பிரார்த்தனை

மட்டக்களப்பைச் சேர்ந்த அக்கரைப்பற்று ஸ்ரீ ராமகிருஷ்ணசங்க வித்தியாலயத்தில் ஸ்ரீமான் S.U.சோமசேகரம் B.A. அவர்கள் தலைமையில் பெற்றார்தினவிழா சென்றவாரம் நிகழ்ந்தது

தமது தலைமைப்பேருரையில் இன்றையத் தமிழ்நாட்டின் நிலையையும், தற்போது புத்துணர்ச்சி பெற்றுக் கிராமங்கள் வளர்ச்சியடைவதையும் அரசாங்க பாடசாலையிலும் பார்க்க ஸ்தாபனங்களால் நடத்தும் பாடசாலைகள் வளர்ச்சியடைவதும், நாட்டுக்கு நன்மை செய்வதும் அதிகம் என்றும், பெற்றாரும ஆசிரியரும் ஒன்றுபட்டு ஒத்துழைத்தால்தான் இப்பெரிய கூட்டம் இங்கு வரமுடியும் என்றும் பேசினார்,

தொடர்ந்து பேசுகையில், ஈழநாட்டுப் பெரியார், கீழக்கிலங்கையின் இராமகிருஷ்ணசங்க ஸ்தாபகர் சுவாமி விபுலாநந்த அடிகளாரது சேவையைப் பாராட்டிப் பேசி அவரது பூதவுடல் மறைந்தாலும் புகழுடல் மறையாது என்று கூறிச் சபையார் சகலரும் எழுந்து 2 நிமிஷங்கள் நிற்க ஆன்மசாந்திக்காக எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்தித்தார்.

அப்பால் தலைமை ஆசிரியன் க. நடராஜன் அவர்கள் பாடசாலை அறிக்கையைப் படித்தார். (இவ்வறிக்கைதான் இராமக்கிருஷ்ணசங்க வித்யாலய அறிக்கைகளில் முதலாவதாக அச்சேற்றப்பட்டதாகும்) அப்பால் ஸ்ரீமான் S J.குணசேகரம் M.A. அவர்கள் பேசினார்கள். அடுத்தபடியாக ஸ்ரீமான் S. மாணிக்கப்போடியவர்கள் பெற்றார் பாடசாலைக்குச் செய்யுங் கடமைகள் என்ற விஷயத்தில பேசினார்கள்.

அடுத்தபடியாகக் காலட்சேபம் நடந்தது. விஷயங்கள் யாவும் ஒலிபெருக்கப்பட்டன. முஸ்லீம், சிங்கள, தமிழ்ச் சகோதரர் சகலரும் பங்குபற்றி விழாவைச்சிறப்பித்தார்கள். ஸ்ரீமான் K. வேலுப்பிள்ளை ஆசிரியரவர்கள நன்றிகூறி 9-15க்குக் கூட்டம் இனிது முடிந்தது.

# சுந்தரமூர்த்தி சுவாமிகளின் திருநாள்

கரவெட்டி விக்கினேஸ்வரக் கல்லூரி மண்டபத்தில் ஷ திருநாள் சென்ற வெள்ளிக்கிழமை (25-7-47) பிற்பகல் 3-45 மணிஅளவில் முதலியார் க. சின்னத்தம்பி அவர்கள் தலைமையில் ஆரம்பமானது அவ்வமையம், வதிரி. பண்டிதர். த. கிருஷ்ணபிள்ளை அவர்கள் (வட மத்திய துவிபாஷாபாடசாலை ஆசிரியர்) "சுந்தரமூர்த்தி சுவாமிகள்" என்னும் பொருள் பற்றி நீண்டதோர் சொற்பொழிவு நிகழ்த்தினர். பின் விளையாட்டில் வெற்றிபெற்றோர்க்குப் பரிசில்கள் தலைவரால் வழங்கப்பட்டன. சபையோர் துதிப்புரையுடன் கூட்டம் பிற்பகல் 6மணியளவில் இனிது நிறைவேறியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம்பந்தர்தொண்டு

1-ம் பக்கத் தொடர்ச்சி

ஆற்றில் எறியப்பெற்றன. சம்பந்தருடைய ஏடுகள் ஆற்றை எதிர்த்து வந்து கரையேறின. மகாராஷ்டிர பக்தரான துகாராமின் விரோதிகளில் சிலர் அவருடைய பாடல்கள் எழுதிய ஏடுகளை இந்திராயணி நதியில் எறிந்தனர். அப்போது, துகாராம், பதின்மூன்று நாள் உபவாசம் இருந்து இறைவனைப் பிரார்த்தித்தனர். இறைவன் ஓர் அழகிய வாலிப வேஷத்தில் வந்து, அருளின விவரத்தை இங்குக் குறிப்பிடலாம்.

பாண்டிய நாட்டில எப்போது சமணமதம் புகுந்தது என்பதைத் திட்டமாகச் சொல்ல முடியாது. அங்குத் தொன்றுதொட்டு வழங்கிவந்த சமயம் சைவமே. ஒரு பாண்டிய இராஜகுமாரத்தியைத் திருமணஞ் செய்துகொள்வதற்காக, சிவபிரான் நேரில் எழுந்தருளிய புராண வரலாறு இதைத் தெரிவிக்கும். அப்படிப்பட்ட நாட்டைப் பழையபடியே சைவத்துக்குக் கொண்டுவருவது மகத்தான சமய வெற்றியாகும் என்று ஞானசம்பந்தர் கருதியிருக்க வேண்டும் ஆகவேதான், இவர் திருநாவுக்கரசரால் தடுக்கப்பட்டபோதும், துணிந்து மதுரை சென்றார். சமணர்களை வாதத்தில் வெல்வதற்குச் சம்பந்தரைக் காட்டிலும் திருநாவுக்கரசரே சமர்த்தர் ஏனெனில் அவர் சமணராக இருந்து, சமண நூல்களை நன்கு கற்றவர். சமணர்களுடைய வாதங்களை அறிந்தவர். என்றாலும், பாண்டிய மனைவியும் மந்திரியும் சம்பந்தரையே வரும்படி அழைத்தனர். இதற்கு இவர் செய்தருளிய அற்புதங்கள் காரணமாக இருந்திருக்க வேண்டும்; அல்லது திருநாவுக்கரசர் முதுமைப் பருவத்தை அடைந்திருக்க வேண்டும். இது எப்படி யிருப்பினும் சம்பந்தர் மதுரைக்கு எழுந்தருளியதின் பயனாக, பாண்டிய அரசன் சமணமதத்தைத் துறந்து, சைவ சமயத்தைக் கைப்பற்றினான். இது தொடங்கி, சமணத்தின் செல்வாக்கு குறைந்தது. நாளடைவில் அது தென்னாட்டிலிருந்து மறைந்தது. இந்த விஷயங்களைப் பற்றிப் பேசும்போது உடல் கூனாக இருந்த "கூன்" பாண்டியன், அந்தக் கூன் நீங்கப்பெற்று, "சுந்தர" பாண்டியன் ஆனான் என்று புராண வரலாறுகள் கூறுகின்றன அரசன் சமணனாகவிருந்து சைவனாக மாறியதையே இது குறிப்பிடுகின்றது வாதத்தில் தோற்ற சமணர்கள் எண்ணாயிரவர் கழுவேற்றப்பட்டதாக ஒரு வரலாறு உண்டு நம் நாட்டில் அப்படிப்பட்ட ஹிம்சைகள் நடந்ததில்லை. சமணமாகிய மலத்தினின்றும் கழுவப்பெற்ற சைவமாகிய கரையில் ஏற்றப்பட்டதை இப்படித் திரித்துக் கூறினர் போலும். இது போதிமங்கை என்னும், இடத்தில் ஞானசம்பந்தர் பௌத்தர்களை வாதத்தில் வென்றபோது அவர்களை இம்சிக்காமல், சைவராக்கினர் என்பதாலும் வலியுறுத்தும்.

இந்த அற்புதங்கள் எல்லாம் இறைவனுடைய பொருளாலேயே நிகழ்ந்தன என்று சம்பந்தர் கூறுகிறார். சிவபெருமானிடம் இவர் கொண்டிருந்த பக்திக்கு அளவேயில்லை. உண்ணினும் படிப்பினும் உறங்கினும் அவன் அடியல்லால் வேறொன்றையும் தமது நா உரையாது: பேரிடர் பெருகிப் பிணிவரினும், கையது வீழினும் கழிவுறினும் இடறினும் தளரினும் வாழினும் சாவினும் வருந்தினும் அவன் கழலல்லாது வேறு ஒன்றையும் தமது மனம் சிந்தியாது என்று கூறுகின்றார்.

"இன்பம் இன்பமே"

ஒவ்வொரு பதிகத்தின் கடைக்காப்புச் செய்யுளிலும் ஞானசம்பந்தர்


## தேவை

சிவன் ஐக்கிய பண்டகசாலைக்குத் தகுதி வாய்ந்த ஓர் மனேச்சர் தேவை. சங்கப் பிரமாணங்களுக்கமைய நடக்கவேண்டும்.

தொடக்கத்தில் மாதச் சம்பளம் ரூபா 55 கொடுக்கப்படும். பிணைப்பணம் ரூபா 450 கட்டவேண்டும். விரும்புவோர் காரியதரிசி அவர்களுக்கு 30-8-47 க்கு முன் விண்ணப்பஞ் செய்யவும்.

சிவன்கோவிலடி இங்ஙனம்
வட்டுக்கோட்டை ந நடேசர்
29-7-47 காரியதரிசி.

M 101 1-8 47 — 29-8-47


அந்தப் பதிகத்தை ஓதுவார்க்கு உண்டாக்கக் கூடிய நன்மைகளைக் கூறியிருக்கிறார். இவையன்றியும் பதிகங்களிலும் பல பாசுரங்களிலும் பலச்ருதியை வெளியிட்டிருக்கிறார். என்றாலும் அவருக்கு இறைவனுடைய கழலை ஏற்றுவதே இன்பம். "சிற்றம்பலம் மேய இறைவன் கழலேத்தும் இன்பம் இன்பமே". "இறைவன் கழலேத்த இன்பம் இன்பமே", "நன்பொன் மலர் தூவ இன்பமாகுமே," என்று பலவிடங்களில் அவர் கூறுகிறார்.

'நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்று நினைப்பது மெய்யடியார்களுடைய சுபாவம். ஆண்டவனுடைய அருளால் சித்தம் தெளிந்த ஞானசம்பந்தர், தாம் பெற்ற நலங்களை உலகத்தாரும் பெறவேண்டும் என்னும் உதார குணத்தால் அவர்களுக்குச் சில உபதேசங்களைச் செய்கிறார். "அத்தன் ஆரூரைப் பத்திமலர் தூவ முத்தியாகும்; சிவபிரானை ஒன்றிய மனத்துடன் தினந்தோறும் ஏத்தினால் வினைபோகும்; அவனுக்குத் தொண்டு செய்யவேண்டும்" என்று இப்படிப்பட்ட மறுமை இன்பங்களைத் தரக்கூடிய உபதேசங்கள் ஒருபுறம் இருக்க, கேடிலா மணியைத் தொழுவதே வாழ்க்கைக்கு ஒரு செழுமுதல் (மூலதனம்) என்று ஒரு பாசுரத்தில் இம்மை யின்பத்தையும் குறிப்பிடுகிறார். நாம் எங்கேனும், யாதாகிப் பிறந்திடினும் அங்கே வந்து நமக்கு இறைவன் அன்பு புரிவான் என்பதும், 'புலனைந்தும் பொறிகலங்கி, நெறி மயங்கி, அறிவழிந்திருக்கும் ஆயுளின் கடை நாளில் வந்து 'அஞ்சேல்'' என்றருள் செய்வான் எனபதும் இம்மை மறுமை இன்பங்களைக் குறிப்பனவாகும். சுருங்கச் சொல்லுங்கால், இறைவன் "தாயினும் நல்ல தலைவன்" என்றே அவர் உறுதிகூறுகிறார்.

ஞானசம்பந்தர், தமது பாசுரங்களில் சிவபெருமானை அழித்தற் கடவுள் என்றே பெரும்பாலும் கூறுகிறார். என்றாலும், இந்த அழித்தற் கடவுளுக்கும் மேற்பட்ட பரம்பொருள் ஒன்று உண்டு. என்பதையும் குறிப்பிடுகிறார். உதாரணமாக "ஈறாய் முதல் ஒன்றாய் இருபெண்ணாண் குணமூன்றாய், மாருமறை நான்காய் வருபூதம் அவை ஐந்தாய், ஆறார் சுவை யேழோசையொ டெட்டுத் திசைதானாய் வேறாயுடனானானிடம் வீழிம்மிழலையே" என்ற பாசுரம் இறைவனுடைய விராட்ரூபத்தை வெகு அழகாகத் தெரிவிக்கின்றது. உபநிஷத்துக்களிலும் பகவத்கீதையிலும் கூறப்பட்ட கொள்கைகள் சம்பந்தருக்கு உடன்பாடுகளே என்பதை அவர் பலவிடங்களில் காட்டியிருக்கின்றார். மாயை மலம், சாங்க்ய தத்வங்கள் அறுசமயங்கள் முதலியவற்றைக் குறிப்பிடுவதினின்றும் இது விளங்குகின்றது.

சம்பந்தருடைய இறுதிக்காலம் அவருடைய மணச்சடங்கு நடந்த காலத்தில் தோன்றிய ஒரு ஜோதியில் நேர்ந்தது என்று முன் கூறினோம் இதுவும் ஓர் அற்புதம். இதற்கு இணையாக முக்தாபாய் என்ற மகாராஷ்டிரதேசத்துப் பக்தை, கீர்த்தனம் செய்துகொண்டிருந்தபோது தோன்றிய ஜோதியில் மறைந்ததைச் சொல்லலாம்

## தேர்தற் தினங்கள்

1-ம் பக்கத் தொடர்ச்சி

செப் 8: கடுகாணவை, வவுனியா.

செப் 9: தலவாக்கொல்லை, பெலியாத்த.

செப் 10 தண்டகமுவ, கலவேவ, வெலிமட, பலாங்கொடை.

செப் 11: மத்துகம, கம்பளை, ஹக்மன.

செப் 13: மொரட்டு, கலகா மத்துவரன்ரு, படிகம, மன்னார், குருநாகலை, மதவாச்சி, அநுராசபுரம், புதல, டெடிகம.

செப் 16: பாணந்துறை, காங்கேசன்துறை, அலுத்நுவர

செப் 17: டம்புல்ல, மஸ்கேலிய, கல்குடா.

செப் 18: உடுகம வட்டுக்கோட்டை, சிலாபம், மாவனலை.

செப் 20: கொழும்பு வடக்கு, கொழும்பு மத்தியபகுதி, கொழும்பு தெற்கு, வெள்ளவத்தை - கற்கிசை, மாத்தளை, மினிப்பே, அம்பாந்தோட்டை, பட்டிருப்பு, கிக்காவரட்டி, அப்புத்தளை, ஹாவான்வலை.


# தேவை

சகல விதமான நகை வேலைகளிலுந் தேர்ச்சி பெற்ற பத்தர்மார்கள் மாதச் சம்பளமாகவோ கம்மிஷனாகவோ வேலை செய்ய விரும்புகிறவர்கள் கீழ்க்கண்ட விலாசத்திற்குத் தங்கள் தங்கள் முக்கிய அனுபவமான வேலைகளைப்பற்றிய தகவல்களுடன்எழுதவும். 40 வயசுக்கு மேற்பட்டவர்கள் தேவையில்லை. தேவைப்பட்டவர்களுக்கு வருவதற்குரிய பேமிற் அனுப்பலாம்.

நேதாஜி டயமெண்ட் கம்பெனி
162 ஊப்போ ரோட்
செண்டுல், கோலாலம்பூர்.

தந்தி: "நேதாஜி" கோலாலம்பூர்

Mis 77 7-7-47 to 5-8-47.

## வியாபாரத்திற்சழகு விளம்பரஞ் செய்தல்

## விளம்பரம்

யாழ்ப்பாணம் பெரியதேருவில், அநுமதிபெற்றுப் பல்வைத்தியம், கண்வைத்தியம் செய்துவரும் நான், பழையபடி இரு வைத்தியங்களையும் தொடங்கி நல்லமூனறயில் நடத்திவருகிறேனென்பதையும், கட்பார்வைக்குரிய கண்ணாடி முதலிய பொருள்களையும், செய்கைப்பல், செயற்கைக்கண் முதலிய பொருள்களையும் இப்பொழுது போதிய அளவு தருவித்திருக்கிறேனென்பதையும் இந்த வடமாகாணத்துள்ள மக்களுக்குத் தெரிவிப்பதோடு, என்னை அபிமானிக்கும்படியும் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

யோசித்தற்குரிய நேரம் நாள்தோறும் — காலை 9 மணிதொடக்கம் 12 வரை; மாலை 2 „ 5 „

Tet 28 11-7—10-10-47. S. சார்ல்ஸ்பத்திரானு.

# யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.

இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பண ரூபா

**134,3670**

**100 ரூபா விகிதமான 8000 பங்குகள்**

பங்குப்பணங் கட்டுமுறை.

மாசமொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு

எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாநோட்டு வட்டத்திற்கு மாற்றிக்கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 9 விகிதம் அறவிடப்படும். (ஈடுவைத்தவர்கள்) முதலையும் பாகம்பாகமாகக்கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
சிறுப்பர்.

Std. 14 20-11-46—20-11-47 (தி)


வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West. Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabha, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai Jaffna. on Tuesday. August. 5, 1947.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org